


We Shine Academy™

guiding you to get through

# நடப்பு நிகழ்வுகள்

# (CURRENT AFFAIRS)

## NOVEMBER

*We Are Here..!! To Guide You..!!*



# We Shine Study Circle

# TNPSC

## நடப்பு நிகழ்வுகள்

## (CURRENT AFFAIRS)

## நவம்பர் - 05.11.2018

We Shine Academy™

guiding you to get through

Main Office @

**Weshine Study Circle**

Chromepet, Chennai

Phone: 8939144344, 8939244344

Branch Office @

**Weshine Study Circle**

Plot No: 47/60, “AK” Block,
7th Main Road, Anna Nagar
Chennai, Tamil Nadu – 600 040.

3rd Floor, West Wing, Gokul Arcarde,
No.2, Sardar Patel Road, Adyar
Chennai, Tamil Nadu – 600 020.

https://weshineacademy.com

# பொருளடக்கம்

- தமிழக நிகழ்வுகள்
- இந்திய நிகழ்வுகள்
- உலக நிகழ்வுகள்
- விளையாட்டு நிகழ்வுகள்
- விருதுகள்










## தமிழக நிகழ்வுகள்

- கிராமப்புற ஏழை மாணவர்களுக்கு, நீட் தேர்வுக்கான ஆலோசனை மற்றும் பயிற்சி அளிக்கும் வகையில் புதிய செல்போன் செயலியான **'aNEETa'** என்ற செயலியை தமிழக மாணவி **இனியாள்** என்பவர் **டெல்லியில்** கண்டுபிடித்துள்ளார்.
  - இச்செயலியில் நீட் தேர்வுக்கு தயாராகும் வகையில் கேள்வி பதில்கள் அமைந்துள்ளன.

## இந்திய நிகழ்வுகள்

- இந்தியா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளின் இராணுவங்கள் இந்தியாவின் **மிசோரோமில்** உள்ள வைரெங்டியில் உள்ள தீவிரவாத எதிர்ப்புப் போர் பள்ளியில் **தர்ம கார்டியன் - 2018 (Dharma Guardian)** என்ற முதலாவது இராணுவக் கூட்டுப் பயிற்சியை ஆரம்பித்துள்ளது.
  - இப்பயிற்சியில் ஜப்பானின் **32வது** தரைப்படைப் பிரிவும், இந்தியாவின் **கூர்க்கா துப்பாக்கி** பிரிவின் **6/1** அணியும் பங்கேற்றுள்ளன.

- இந்தியாவில் முதன்முறையாக **முன்னெச்சரிக்கை தகவல் பரப்பு மையத்தை ஒடிஷா மாநில அரசு** அறிமுகப்படுத்தியுள்ளது. இது அபாயச் சங்கு கோபுரத்தின் மூலம் **புயல் மற்றும் சுனாமி** குறித்து, ஒரே நேரத்தில் கடற்கரையோரத்தில் வசிப்பவர்களுக்கும் மீனவர்களுக்கும் எச்சரிக்கைவிடுக்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது.
  - **400 கி.மீ** கடல் எல்லைக் கொண்ட **ஒடிஷா** மாநிலத்தில் **122 கோபுரங்கள்** அமைக்கப்பட்டுள்ளன.

- **2018ம்** ஆண்டு **நவம்பர் 16ம்** தேதியன்று இராணுவத்தின் விமானப்படை தனது **33வது நிறுவன தினத்தைக்** கொண்டாடியுள்ளது. இதனைக் குறிப்பிடும் விதமாக புதுடெல்லியில் இந்தியா கேட் அருகே **அமர் ஜவான் ஜோதி** என்ற இடத்தில் **மலர்வளையம்** வைக்கும் விழா நடத்தப்பட்டது.



We Shine Academy™

- நாட்டில் முதல் முறையாக **உள்நாட்டு நீர்வழி போக்குவரத்து திட்டம்** மூலம், **சரக்கு படகு இயக்கும் திட்டம்** தொடங்கப்பட்டுள்ளது. இந்த சரக்கு படகு பயணத்தை கங்கை நதியில் கப்பல் துறை செயலர் **கோபால கிருஷ்ணா** மற்றும் **பெப்சிகோ நிறுவன உயரதிகாரிகள்** கொடியசைத்து தொடங்கி உள்ளனர்.
  - இந்த சரக்கு கப்பலை வரும் நவம்பர் 12ம் தேதியில் வாரணாசியில் இந்திய பிரதமர் நரேந்திர மோடி வரவேற்க உள்ளார்.

## உலக நிகழ்வுகள்

- சுற்றுலாத் துறையில் **இந்தியா மற்றும் தென்கொரியாவிற்கு** இடையே ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்காக புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

- **பாகிஸ்தான்** பிரதமராக பதவியேற்றுள்ள **இம்ரான்கான்** முதல் முறையாக சீனாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு **சீன பிரதமர் லீ கெகியாங்கை** சந்தித்துள்ளார். இதில் சீனா மற்றும் பாகிஸ்தான் ஆகிய இரு நாடுகளும் வனம், பூமி, அறிவியல், விவசாயம், தொழில் உள்ளிட்ட 16 துறைகளில் இணைந்து பணியாற்றும் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளன.
  - மேலும் சீன அரசு, **சுமார் 6 மில்லியன் டாலரை** பாகிஸ்தானுக்கு நிதி உதவியாக வழங்க உள்ளது.

## விளையாட்டு நிகழ்வுகள்

- **2020ம் ஆண்டு** ஏப்ரல் மாதம் **பார்முலா ஒன் பந்தயத்தை வியட்நாம்** நடத்த உள்ளது. பார்முலா ஒன் பந்தயத்தை நடத்த உள்ள **மூன்றாவது தென்கிழக்காசிய** நாடாக **வியட்நாம்** உருவெடுத்துள்ளது.
  - இப்பந்தயம் அதன் தலைநகரான ஹனோயில் நடத்தப்பட இருக்கின்றது.

We Shine Academy ™

# விருதுகள்

- **கேரள மாநில** அரசின் முதன்மை இலக்கியப் பரிசான **எழுத்தச்சன் புரஸ்காரம்** என்ற **விருதின் 2018ம்** ஆண்டுக்கான எழுத்தாளராக **எம். முகுந்தன்** தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.
    - மலையாள மொழி இயக்கத்தின் தந்தை என்று அறியப்படும் **துஞ்சத்து ராமானுஜன் எழுத்தச்சன்** என்ற கவிஞரின் பெயர் கொண்டு இவ்விருது வழங்கப்படுகிறது.

We Shine Academy™